بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 21/01/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 7**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

**சீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) எனும் நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:** மதீனா சென்றடைந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெண் ஒட்டகம், சஹ்ல் மற்றும் சுஹைல் என்ற இரு முஸ்லிம் சிறுவர்களின் இடத்தில் சென்று உட்கார்ந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசல் கட்டுவதற்காகவும் தம் அறைகளை கட்டுவதற்காகவும் நாடியவாறு அந்த நிலத்தை 10 தீனாருக்கு வாங்கினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் செல்வத்திலிருந்து அந்த தொகை செலுத்தப்பட்டது. ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் துஆ செய்தவாறு அடிக்கல் வைத்தார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், உங்களுடைய கல்லை என்னுடைய கல்லுடன் சேர்த்து வையுங்கள் என்றார்கள். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், உங்களுடைய கல்லை அபூபக்ருடைய கல்லுடன் சேர்த்து வையுங்கள் என்றார்கள். பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம், உங்களுடைய கல்லை உமருடைய கல்லுடன் சேர்த்து வையுங்கள் என்றார்கள்.

நபவி பள்ளிவாசலின் அனைத்து கட்டுமானப் பணியிலும், அதேபோன்று பிற்காலத்தில் ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டில் முஹர்ரம் மாதத்தில் கைபர் போரின் வெற்றிக்குப் பிறகு அந்த பள்ளிவாசலின் விரிவாக்கம் மற்றும் புதுப்பிக்கும் பணியிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபா பெருமக்களுடன் சேர்ந்து பங்கெடுத்தார்கள்.

**புகாரி ஹதீஸின் விரிவுரையாளரான அல்லாமா கஸ்தலானி கூறுகிறார்கள்:** சகோதரத்துவம் இரு முறை ஏற்படுத்தப்பட்டது. ஹிஜ்ரத்துக்கு முன்பு மக்காவில் முதன் முறையாக ஏற்படுத்தப்பட்டது. அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோருக்கிடையிலும், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) ஆகியோருக்கிடையிலும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோருக்கிடையிலும், ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) ஆகியோருக்கிடையிலும், ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் தமக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். இரண்டாவது முறையாக ஹிஜ்ரத்துக்குப் பிறகு மதீனாவில் ஏற்படுத்தப்பட்டது. அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத்

அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் வீட்டில் 50 முஹாஜிர்கள் மற்றும் 50 அன்ஸார் பெருமக்களுக்கிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

பத்ர் போருக்கு புறப்படுவதற்கு முன்பாக சஹாபிகளிடம் 70 ஒட்டகங்கள் இருந்தன. ஓர் ஒட்டகத்தில் மூன்று பேர் மாறி மாறி பயணம் செய்ய வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோர் ஓர் ஒட்டகத்தில் மாறி மாறி பயணம் செய்தனர். சிரியாவின் திசையிலிருந்து வந்து கொண்டிருந்த அபூ சுஃப்யான் அவர்களின் வியாபார குழுவை தடுத்து நிறுத்துவதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பத்ர் ஐ நோக்கி புறப்பட்டார்கள். ஆனால் குறைஷியர்களின் ஒரு படை மிகவும் வேகமாக அந்த குழுவை காப்பாற்றுவதற்காக வந்து கொண்டிருக்கிறது என்ற செய்தி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கிடைத்த போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபிகளிடம் ஆலோசனை கேட்டார்கள். எதிரியை விட்டு விட்டு வியாபார குழுவை நோக்கியே செல்ல வேண்டும் என ஒரு சாரார் கூறினர். அந்த ஆலோசனையைக் கேட்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முகம் மாறி விட்டது. அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் மிகவும் சிறப்பாக பேசினார்கள். ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் உங்களுக்கு எதைக் குறித்து கட்டளையிட்டுள்ளானோ அதை நோக்கியே நீங்கள் செல்லுங்கள். நாங்கள் வாள்களால் போரிட்டவாறே தங்களுடன் வந்து கொண்டிருப்போம். பிர்(க்)குல் ஃகிமாத் வரை சென்றடைந்தாலும் சரியே! என்று கூறினார்கள்.

பிர்(க்)குல் ஃகிமாத் என்பது மக்காவிலிருந்து 5 இரவு பயண தொலைவில் உள்ள ஒரு நகரமாகும்.

இதைக் கேட்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முகம் பிரகாசித்தது. இதைக் கேட்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்வுற்றார்கள்.

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் வீரம் குறித்து ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு வருகிறது.** ஒரு முறை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: சஹாபிகளில் அனைவரையும் விட அதிக வீரரும் துணிவுள்ளவரும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களே ஆவார்கள். பத்ர் நாளில் நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக நிழற்குடை அமைத்தோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எந்த ஒரு முஷ்ரிக்கும் நெருங்கி விடாத வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இன்று யார் இருப்பார் என நாங்கள் பேசிக்கொண்டோம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! எங்களில் எவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் செல்லவில்லை! ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வாளேந்தியவாறு, அபூபக்ரை எதிர்கொள்ளாத வரையில் எந்த ஒரு முஷ்ரிக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நெருங்க முடியாது என்று கூறும் வண்ணம் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கருகில் சென்று நின்று விட்டார்கள்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** பத்ர் போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக ஒரு தனி மேடை அமைக்கப்பட்டது. அந்த மாபெரும் அபாயகரமான வேளையில் மிகவும் துணிவுடன் அன்னாரை பாதுகாக்கும் கடமையை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் செய்து முடித்தார்கள். அவர்கள் உருவிய வாளுடன் அன்னார் (ஸல்) அவர்களுக்கு அருகில்

நின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோ இரவு முழுவதும் மன்றாடி துஆக்களை செய்து கொண்டிருந்தார்கள். முழு படையிலும் அன்னார் (ஸல்) அவர்கள் மட்டுமே இரவு முழுவதும் விழித்திருந்தார்கள்.

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பத்ர் நாளில் 1000 முஷ்ரிக்களுக்கெதிராக 319 சஹாபிகளைப் பார்த்த போது அன்னார் கிப்லாவை நோக்கி முகம் திருப்பினார்கள். இரு கைகளையும் விரித்து உரத்த குரலில், ‘‘அல்லாஹ்வே! நீ என்னுடன் செய்த வாக்குறுதியை நிறைவேற்றுவாயாக. முஸ்லிம்களின் இக்கூட்டத்தை நீ அழித்து விட்டால் பூமியில் உனது வணக்க வழிபாடு நிகழாது.’’ என்று தொடர்ச்சியாக தம் இறைவனிடம் பிரார்த்தித்தார்கள். இதைக் கண்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், தாங்கள் தங்களுடைய இறைவனுக்கு முன் செய்த வேதனை மிகுந்த துஆக்கள் போதுமானது. அவன் தன் வாக்குறுதிகளை நிச்சயமாக நிறைவேற்றுவான் என்று கூறினார்கள். அப்போது அல்லாஹ் இவ்வசனத்தை இறக்கினான்.

اِذۡ تَسۡتَغِيۡثُوۡنَ رَبَّكُمۡ فَاسۡتَجَابَ لَكُمۡ اَنِّىۡ مُمِدُّكُمۡ بِاَلۡفٍ مِّنَ الۡمَلٰٓـئِكَةِ مُرۡدِفِيۡنَ

‘‘(நினைத்துப் பாருங்கள்!) நீங்கள் உங்கள் இறைவனிடம் மன்றாடி உதவி கோரியபோது, உங்கள் இறைவன் உங்களுடைய வேண்டுதல்களை ஏற்றுக் கொண்டான் என்றும் (அந்த வாக்குறுதியுடன்), நான் உங்களுக்கு அணி அணியாக தொடர்ந்து வரக்கூடிய ஆயிரக்கணக்கான வானவர்கள் மூலம் உதவி செய்வேன் என்று பதிலளித்தான்.’’ **(திருக்குர்ஆன் 8:10)**

ஆகவே, அல்லாஹ் வானவர்களைக் கொண்டு அன்னாருக்கு உதவி செய்தான்.

பத்ர் போரில் கடும் யுத்தம் தொடங்கியபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நிழற்குடையிலிருந்து வெளியே வந்தார்கள். போர் செய்யும்படி மக்களுக்கு உற்சாகமூட்டினார்கள். மக்கள் தம் வரிசைகளில் அல்லாஹ்வை நினைவு கூர்ந்துகொண்டிருந்தனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சுயமே நன்கு போரிட்டார்கள். அன்னாருக்கு அருகிலேயே அன்னாருடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இணையற்ற வீரம் வெளிப்பட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வரம்பு மீறிய ஒவ்வொரு நிராகரிப்பாளருடனும் போரிட ஆயத்தமாக இருந்தார்கள். அது அவர்களின் மகனாக இருந்தாலும் சரியே! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகன் அப்துர் ரஹ்மான் அவர்கள் காஃபிர்களின் சார்பாக போரிட வந்திருந்தார்கள். அவர்கள் பிற்காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட போது தமது தந்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், பத்ர் நாளில் தாங்கள் எனக்கு முன்னால் மிகவும் தெளிவான இலக்கில் இருந்தீர்கள். ஆனால் நான் உங்களை கொலை செய்யவில்லை என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், இறைவன் உமக்கு ஈமான் வழங்க வேண்டியதிருந்தது. ஆகவே நீ தப்பி விட்டாய்! இல்லையெனில், இறைவன் மீது ஆணையாக! நான் (போரில்) உன்னைக் கண்டிருந்தால் நிச்சயமாக கொன்றிருப்பேன் என்றார்கள்.

மதீனா சென்றடைந்த பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், போர் கைதிகளிடமிருந்து ஈட்டுத் தொகை பெற்றுக் கொண்டு அவர்களை விடுவித்து விட வேண்டும்; ஏனென்றால், பிற்காலத்தில் இவர்களிலிருந்தே எவரேனும் இஸ்லாத்தின் நேசராக உருவாகலாம் என ஆலோசனை கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த ஆலோசனையை எதிர்த்தார்கள். அவர்கள் அனைவரையும் கொன்று விட வேண்டும் என கூறினார்கள்.

ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் இயல்பில் காணப்பட்ட கருணையின் அடிப்படையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆலோசனையை விரும்பினார்கள். ஆகவே எந்த முஷ்ரிக் தம் ஈட்டுத் தொகையை செலுத்தி விடுகிறாரோ அவரை விடுவித்து விடுங்கள் என கட்டளையிட்டார்கள். பிறகு இதற்கேற்பவே இறை கட்டளையும் இறங்கியது.

முஸ்லிம்களுக்கும் மக்கத்து குறைஷியர்களுக்கும் இடையில் உஹது போர் நடை பெற்றது. ஒரு கனவின் அடிப்படையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குள் இருந்து கொண்டு எதிர்கொள்வதை பொருத்தமானதாகக் கருதினார்கள். ஆனால் அநேக இளம்வயது சஹாபிகளிடம் காணப்பட்ட பேரார்வம் மற்றும் அவர்கள் பெரும் வலியுறுத்தலுடன் எடுத்து வைத்த கோரிக்கையின் காரணமாக, நகரை விட்டு வெளியேறி திறந்த வெளியில் போரிடலாம் என்ற கருத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆயுதங்கள் ஏந்தி அல்லாஹ்வின் பெயரை உச்சரித்தாவாறு வெளியே வந்த போது சில சஹாபிகளின் அறிவுரையின் காரணமாக அந்த இளைஞர்களுக்கு தம்முடைய தவறு புரிய வந்தது. அவர்கள் வருத்தத்தோடும், வெட்கி தலை குனிந்தவாரும் ஒரே குரலாக, நாங்கள் தவறிழைத்து விட்டோம். தாங்கள் எதை பொருத்தமானதாகக் கருதுகிறீர்களோ அதையே செயல்படுத்துங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவனுடைய நபி ஆயுதங்களை ஏந்திய பிறகு அவ்விஷயத்தில் இறைவன் ஏதேனும் தீர்ப்பு வழங்கியிருக்காத நிலையில் அந்த ஆயுதங்களை கீழே வைப்பது இறைத்தூதரின் கண்ணியத்திற்கு மாற்றமானதாகும். ஆகவே, இப்போது நீங்கள் பொறுமையைக் கடைபிடித்தால் அல்லாஹ்வின் உதவி உங்களுடன் இருக்கும் என்று நீங்கள் உறுதி கொள்ளுங்கள் என்றார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:** உஹது போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை சுற்றி கூடியிருந்த சஹாபிகள் செய்த உயிர் தியாகங்கள் எவ்வாறானதாக இருந்தது என்றால், அதற்கு நிகரான ஒன்றை வரலாறால் எடுத்துக் காட்ட இயலாது. அந்த சஹாபிகள் விட்டில் பூச்சிகளைப் போன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக தம் உயிரோடு விளையாடிக் கொண்டிருந்தனர். எந்த தாக்குதல் தொடுக்கப்பட்டாலும் அதை தம் மீது ஏந்திக் கொண்டவாறு எதிரிகளின் மீதும் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தார்கள். சில சமயங்களில் அன்னாரைச் சுற்றி இருவர் மட்டுமே இருந்தார்கள். அவ்வாறு உயிர் தியாகம் செய்ய ஆயத்தமானவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), அலீ (ரலி), தல்ஹா (ரலி), ஸுபைர் (ரலி), சஃது பின் வகாஸ் (ரலி), அபூ துஜானா அன்சாரி (ரலி), சஃது பின் முஆஸ் (ரலி), தல்ஹா அன்சாரி (ரலி) ஆகியோரின் பெயர்கள் குறிப்பாக இடம்பெற்றுள்ளன.

உஹது போரின் போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய பல்லும் உடைந்து விட்டன. முகத்தில் காயம் ஏற்பட்டது. அன்னாருடைய அருளுக்குரிய முகத்தில் முகக் கவசத்தின் ஆணிகள் பதிந்து விட்டன. ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் அந்த ஆணிகளை தம் வாயால் எடுத்த போது அவர்களின் முன் வரிசை பற்களில் இரண்டு பற்கள் உடைந்து விட்டன. முன் வரிசை பற்கள் உடைந்த மக்களுள் அனைவரையும் விட ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் மிகவும் அழகானவராக திகழ்ந்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் சேர்ந்து தல்ஹா (ரலி) அவர்களிடத்தில் வந்து அவர்களைக்கண்ட போது அவர்களின்

உடலில் ஈட்டி, வாள் மற்றும் அம்புகள் ஆகியவற்றின் சற்றேறக்குறைய 70 காயங்கள் இருந்தன. அத்துடன் அவர்களின் விரலும் வெட்டப்பட்டிருந்தது. அந்த இருவரும் தல்ஹா (ரலி) அவர்களுக்கு மருந்துக்கட்டு போட்டனர்.

உஹது போரின் போது ஒரு சந்தர்ப்பத்தில் மலையடிவாரத்தில் முஸ்லிம்களின் எஞ்சியிருந்த படை நின்று கொண்டிருந்தபோது அபூ சுஃப்யான் அவர்கள் மிகவும் உரத்த குரலில், நாங்கள் முஹம்மத் (ஸல்) அவர்களை கொன்று விட்டோம்; அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரையும் கொன்று விட்டோம் என்று கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையின் காரணமாக இஸ்லாமிய படையிலிருந்து இதற்கு எவ்வித பதிலும் வராததைக் கண்டு காஃபிர்கள் தாம் கூறிய விஷயத்தின் மீது உறுதி கொண்டனர். மகிழ்ச்சியில், أُعْلُ هُبَلُ أُعْلُ هُبَلُ எங்களுடைய கண்ணியத்திற்குரிய ஹுபல் சிலையின் மகிமை உயரட்டும்; இன்று அது இஸ்லாத்தின் கதையை முடித்துவிட்டது என்று முழக்கமிட்டனர். ஏக இறைவனுடைய கண்ணியம் கேள்விக்குறியானபோது, இணைவைத்தலின் முழக்கம் போர்க்களத்தில் முழங்கியபோது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க சஹாபா பெருமக்கள் மிகவும் உத்வேகத்துடம், اَللّٰهُ اَعْلٰى وَاَجَلّ اَللّٰهُ اَعْلٰى وَاَجَلّ என்று பதிலளித்தார்கள். அதாவது, ஏக இறைவனும் இணையற்றவனுமாகிய அல்லாஹ்வே கண்ணியத்திற்குரியவன் ஆவான். அவனது மகிமையே மேலானதாகும். இந்த பதில் காஃபிர்களின் படையில் எந்த அளவு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அவர்களின் உள்ளங்கள் உள்ளுக்குள்ளேயே அச்சத்திற்குள்ளாகி விட்டன. உடனடியாக மக்காவுக்கு திரும்பிச் செல்வதை பொருத்தமானதாகக் கருதினார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன்னெச்சரிக்கையுடன் 70 சஹாபிகளைக் கொண்ட ஒரு படையை - அதில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஆகியோரும் இருந்தார்கள், காஃபிர்களைப் பின்தொடர்ந்து செல்லுமாறு அனுப்பி வைத்தவாறு, 'குரைஷியர்கள் ஒட்டகங்களில் பயணம் செய்தவாறு குதிரைகளை வெறுமனே ஓட்டிச் செல்கிறார்கள் என்றால் அவர்கள் மக்காவை நோக்கி திரும்பிச் செல்கிறார்கள் என புரிந்து கொள்ளுங்கள். ஆனால் அவர்கள் குதிரைகளில் பயணம் செய்கிறார்கள் என்றால் அவர்களின் எண்ணம் நல்லதாக இல்லை என புரிந்து கொள்ளுங்கள்' என அறிவுரை செய்து அனுப்பி வைத்தார்கள். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிகவும் உத்வேகத்துடன், குரைஷியர்கள் இப்போது மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்தார்கள் என்றால், இறைவன் மீது ஆணையாக! நாம் அவர்களை எதிர்கொண்டு அவர்களின் அந்த தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுப்போம் என்றார்கள். எவ்வாறிருப்பினும், குரைஷிய படை மக்காவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்ற தகவல் வெகு விரைவில் கிடைத்தது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இந்த குறிப்பு இனி வருங்காலங்களிலும் தொடரும் இன்ஷா அல்லாஹ்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**